கழகத்தால் சென்னையில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகிறது. இப்பயணத் திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. பல புதிய சுற்றுலாப் பயணத் திட்டங்களும் தேவைக்கேற்ப தொடங்கப்பட உள்ளன. இந்தியாவிலேயே முதல் முதலாக சுற்றுலா முகவர்கள் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இக்கழகத்தினால் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இணைப்பு VI.

(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—52 வினா எண். 11941க்கான விடையைக் காண்க.)

''அரசுத் தொழிற்சாலைப் பணியாளர்கள் உதவி பெறும் வருங்கால வைப்பு நிதித் திட்டம் என்ற பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஒன்றினை அரசு 1—4—70 முதல் கொண்டு வந்தது. இத்திட்டம் அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைப் பிரிவுகளில் பணியாற்றும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இதனால் வருங்கால வைப்பு நிதி (பல்வகை) சட்டத்தினை இந் நிறுவனங்கள் நடைமுறைப்படுத்துவதிலிருந்து இறுதியான விதிவிலக்கு அளிக்கும் வகையில், தற்காலிக 'தளர்த்துதல் ஆணை' யொன்று 38 நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது.

2. வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திலிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட வேண்டிய மொத்தத் தொகையான சுமார் ரூ. 176 இலட்சங்களில் ரூ. 15 இலட்சங்கள் ஏற்கனவே மாற்றப்பட்டுவிட்டது. மீதித் தொகையான சுமார் 161 இலட்சங்களை மாற்றம் செய்யும் வழி வகைகளுக்கென, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தமிழக அரசுக்கு செயற்குறிப்பொன்றினை அனுப்பியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இணைப்பு VII.

(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—53 வினா எண். 12038-க்கான விடையைக் காண்க.)

(அ) அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு நியாய வாடகை, நிர்ணயம் செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் 1976 நவம்பரில் நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட துணை ஆணையரைத் தலைவராகவும் அறநிலையத்துறையின் செயல் பொறியாளரை தொழில் நுட்ப உறுப்பினராகவும் ஆலயச் செயல் அலுவலரைச் செயலாளராகவும கொண்டனவாக அவை இருந்தன. இக்குழுக்கள் பொதுப் பணித்துறை பின்பற்றும் வித

முறைகளின்படி கட்டிடங்களுக்கு வாடகையினை நிர்ணயித்தன. 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைச் சட்டப் பிரிவுகளின்படியும், அச்சட்டத்தின்பாற்பட்ட விதிமுறைகளின்படியும் அறநிலையக் கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யும் பொறுப்பு சம்பந்தப்பட்ட ஆலயத்தின் அறங்காவலர் குழுவினைச் சார்ந்தது. அநேகமாக எல்லா பெரிய ஆலயங்களுக்கும் அறங்காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாலும் அறநிலையத் துறையின் பொறியியல் பிரிவின் செய்ற்பொறியாளர் பதவி 1—2—1979 முதல் நீக்கப்பட்டாலும், மேற்குறிப்பிட்ட நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் தேவையில்லை என்று கருதப்பட்டு 1—2—1979 முதல் நீக்கப்பட்டன.

(ஆ) வாடகை உயர்வினை முறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வழங்கப்பட்ட வழிகாட்டி முறைகள் பின்வருமாறு :—

குடியிருப்புக் கட்டிடங்கள் (Residential Buildings) மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் (Non-Residential Buildings) (அதாவது மருத்துவ மனை, பள்ளிகள், அரசு அலுவலகங்கள் உள்ள கட்டிடங்கள்) :—

(1) இந்தக் கட்டிடங்களுக்கு 1385 ஆம் பசலி ஆரம்பித்தது முதல் வாடகை உயர்த்தப்படாமல் இருந்தாலும், அல்லது 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் கொடுக்கப்பட்ட அறிவுரைகளின்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் அவைகளைத் திருத்தி 1385-ம் பசலியில் உள்ள வாடகையைவிட அரைப் பங்கு (50 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயிக்கலாம்.

(2) 1382 ஆம் பசலி முதல் வாடகை உயர்த்தப்படாமல் இருந்தாலும் அல்லது நியாய வாடகை ஏற்கனவே உள்ள அறிவுரைகளின்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அவைகளைத் திருத்தி 1382 ஆம் பசலியில் உள்ள வாடகையுடன் $\frac{3}{4}$ பங்கு (75 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(3) 1382-ம் பசலிக்கு முன்பு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை அந்த வாடகை உயர்த்தப்படாமலோ, நிர்ணயம் செய்யப்படாமலோ இருந்தாலும் அவைகளுக்கு 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் ஒரு பங்கு (100 சத விகிதம்) சேர்த்து நியாய வாடகை நிர்ணயம் செய்யலாம். கடைகள், வியாபார நோக்குள்ளவை (Commercial Buildings).

இப்பிரிவில் கடைகளுக்கும் மற்றும் இதர வியாபார நோக்குள்ளவைகளுக்கு விடப்பட்ட கட்டிடங்கள் அடங்கும். இம்மாதிரியான கட்டிடங்களுக்கு கீழே கொடுத்துள்ள வழிகாட்டி

[1984 மார்ச் 6

முறைப்படி வாடகை உயர்வு செய்து நியாய வாடகைக் குழுவின் பரிசீலனைக்கு வைத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்:—

(1) ஆலயங்களின் மூலம் வசதிகள் செய்து தரப்பட்டுள்ள கட்டிடங்கள், கடைகள் மற்றும் இதர வியாபார நோக்குள்ளவைகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு 1385-ம் பசலி முதல் வாடகை உயர்த்தப்படாமலோ, அல்லது திருத்தம் செய்யப்படாமலோ இருந்தால் அவைகளுக்கு 1385-ம் பசலியில் உள்ள வாடகையுடன் $\frac{3}{4}$ பங்கு (75 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(2) 1382-ம் பசலி முதல் இக்கட்டிடங்களுக்கு வாடகை உயர்வு செய்யப்படாமல் அல்லது திருத்தப்படாமல் இருந்தால், 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் 1 1/8 பங்கு (112.50 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(3) 1382-ம் பசலிக்கு முன்பிருந்து வாடகை உயர்த்தப்படாமல் அல்லது திருத்தம் செய்யப்படாமல் இருக்கும் கட்டிடங்களுக்கு 1382-ம் பசலியில் உள்ள வாடகையுடன் $1\frac{1}{2}$ பங்கு (150 சதவிகிதம்) சேர்த்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆலயத்தினால் எவ்வித வசதியும் செய்து தரப்படாத கடைகள் மற்றும் வியாபார நோக்குள்ள கட்டிடங்கள்.

(1) ஆலயங்களின் மூலம் கடைகளுக்கும மற்ற வியாபார நோக்குள்ளவைகளுக்கும் (தையல், அங்காடிக்கடை முதலியவை) வாடகைக்கு விடப்பட்டிருக்கும் கட்டிடங்களில் எவ்வித வசதிகளும செய்து தரப்படாமலும் இருந்தால் மேற்படி கட்டிடங்களுக்கு குடியிருப்புக் கட்டிடங்களுக்கு முதலில் குறிக்கப்பட்டுள்ள வழிகாட்டி முறைகளின்படி வாடகை உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்யலாம்.

(2) குற்றாலம் போன்ற இடங்களில் பருவ காலத்தில் மட்டும் வியாபாரம் நடைபெறுவதால் பருவம் அல்லாத மற்ற காலங்களுக்கு இப்பொழுது நிர்ணயிக்கப்படும் பருவ கால வாடகையில் 3/4 பங்கு வசூலிக்கலாம்.